பக்கங்கள் 12

விலை ரூ. 50


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 168

சனிக்கிழமை 13 மே 2023

சித்திரை 30 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054


## பௌத்த மயமாக்கல்; திருமலையில் போராட்டம்

திருகோணமலை, மே 13
திருகோணமலை, நெல்சன் திரையரங்கு முன்பாக, தொல்பொருள் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட இடத்தில் நான்கு அடி உயரம் கொண்ட புத்தர் சிலையொன்று நாளை »11

ஜனாதிபதி – தமிழ் எம்.பிக்கள்

## நேற்றைய சந்திப்பு ஒத்திவைப்பு!

கொழும்பு, மே 13
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே நேற்று நடைபெறவிருந்த சந்திப்பு பிற்போடப்பட்டது. »11



## கிழக்கில் நேற்றையதினம் முள்ளிவாய்க்கால் கஞ்சி!

திருகோணமலை, மே 13
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில், பொதுமக்கள் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் பங்குபற்றலுடன், முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப் »11

## பாவனைக்குதவாத இறைச்சி; உணவகத்துக்கு 'சீல்' வைப்பு

யாழ்ப்பாணம், மே 13
மனித நுகர்வுக்கு ஒவ்வாத இறைச்சியுடன் கொத்து ரொட்டியை விற்பனை செய்த உணவகம் ஒன்று பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் 'சீல்' வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் நேற்று இடம்பெற்றது. »11

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த

## 2,090 கிலோ கஞ்சா தமிழகத்தில் மீட்பு!

சென்னை, மே 13
இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த சுமார் 2 ஆயிரத்து 90 கிலோ கஞ்சா தமிழகத்தில் நேற்று மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்களாக ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், »11

# உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்திலும் தொல். திணைக்கள ஆக்கிரமிப்பு

## முள்ளிவாய்க்கால் நாளில் எல்லையிடல் நடவடிக்கை காற்றில் பறந்தது ரணிலின் வாக்குறுதி

**யாழ்ப்பாணம், மே 13**
**கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயக் காணியை எதிர்வரும் 18ஆம் திகதி - முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் அளவிடுவதற்கும், எல்லையிடுவதற்கும் தொல்பொருள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.** »11

குடும்பத்தலைவர் மீது

## கொடூரத் தாக்குதலை நடத்தி வீடியோ வெளியிட்டோர் கைது

யாழ்ப்பாணம், மே 13
கூரிய ஆயுதங்கள் மற்றும் பொல்லுகளால் கடும் காயம் விளைவிக்கும் வகையில் குடும்பத்தலைவர் மீது தாக்குதல் நடத்தி, அதன் காணொலியை 'ரிக்ரொக்' செயலியில் வெளியிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சம்பவத்துடன் தொடர்புடையவர்களாகக் கருதப்படும், வடமராட்சி, நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த 8 பேர் கடந்த 10 நாள்களாக தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்று இரவு அவர்கள் கைது செய்யப்பட்டனர். காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரே »11



## யாழ். பல்கலையில் இனப்படுகொலை வாரம் நேற்றுக் கடைப்பிடிப்பு!

யாழ்ப்பாணம், மே 13
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின், முதலாம் நாள் நினைவஞ்சலி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்றது. 2009ஆம் ஆண்டு இறுதிப் போரில் »11

# 14 வயது மாணவன் உயிர் மாய்ப்பு

## இறப்புக்கு ஆசிரியரே காரணம் என்று எழுதப்பட்ட கடிதமும் சிக்கியது

வவுனியா, மே 13
வவுனியா, ஆச்சிபுரம் பகுதியில் 14 வயதுடைய மாணவர் ஒருவர் தூக்கிலிருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தனது இறப்புக்குக் காரணம் என்று »11

## பால்மா விலை ரூ.200 குறைப்பு

கொழும்பு, மே 13
இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலைகளை »11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 10 நாள்களில் 60 பேர் மாயம்

**கொழும்பு, மே 13**

**இந்த மாதத்தின் முதல் 10 நாள்களில் 59 பேர் காணாமற்போயுள்ளனர் எனப் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.**

காணாமற்போனவர்களில் 17 பேர் சிறார்கள் எனப் பொலிஸ் தரவுகளின் பகுப்பாய்வில் தெரியவந்துள்ளது.

காணாமற்போன சிறார்களில் அதிகமானவர்கள் சிறுமிகள். 13 சிறுமிகளும், 4 சிறுவர்களும் காணாமற்போயுள்ளனர். பெரியவர்களில் 17 பெண்களும் 25 ஆண்களும் காணாமற்போயுள்ளனர்.

அதேவேளை பெற்றோருடன் மோதல்கள் காரணமாக சில குழந்தைகள் வீட்டைவிட்டுச் சென்றுள்ளனர் எனவும் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச-இ)

## விதிகளை மீறி ஆடுகளை ஏற்றியவர் கைது

வவுனியாவில் விதிமுறைகளை மீறி 54 ஆடுகளை கூலர் ரக வாகனத்தில் ஏற்றிச் சென்றவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். தாண்டிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் வாகனத்தை மறித்து பொலிஸார் சோதனையிட்டபோதே சந்தேகநபர் கைதானார். (ச-18)

## மாணவியின் குடிதண்ணீரில் சிறுநீர் கலந்த மாணவர்கள்

### கிளி. பாடசாலையில் விபரீதம்

கிளிநொச்சி, மே 13

சகமாணவி ஒருவரின் குடிதண்ணீர் போத்தலுக்குள் சிறுநீர் கலந்து வைத்த நிலையில் அதனையறியாது மாணவி பருகியுள்ள சம்பவம் பாடசாலையொன்றில் நிகழ்ந்துள்ளது.

கிளிநொச்சி நகரிலுள்ள முன்னணிப் பாடசாலையொன்றில் இந்த விபரீத சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

மாணவர் தலைவராகச் செயற்படும் குறித்த மாணவி, சகமாணவர்களுடன் கண்டிப்பாக செயற்படுபவர். அவரது கண்டிப்பால் மாணவர்கள் சிலர் அதிருப்தியுற்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பாடசாலைவேளையில் மாணவி வகுப்பறையின் வெளியே சென்றுள்ளார். அவர் மீண்டும் வகுப்பறை திரும்பி தனது குடிதண்ணீர் போத்தலிலுள்ள நீரைப் பருகியுள்ளார். அதன் தன்மை மற்றும் நிறம் வித்தியாசமாக உள்ளமையால் சந்தேகமடைந்து ஆசிரியருக்குத் தெரியப்படுத்தினார்.

ஆசிரியரும் அதனை பரிசோதித்து சந்தேகமுற்று பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கு தகவல் வழங்கினார். பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட சோதனையில், குடிதண்ணீர் போத்தலில் சிறுநீர் கலந்திருந்தமை தெரியவந்தது. மாணவியின் கண்டிப்பால், பழிவாங்குவதற்காக சகமாணவர்கள் சிறுநீரைக் கலந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது எனத் தெரியவந்துள்ளது.

பாடசாலை நிர்வாகம் இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் கூறப்படுகிறது. (ச-இ)

## பாடசாலையின் அருகே கொட்டப்படும் கழிவுகள்

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மதிலோரம் உள்ள வீதியில் பொதுமக்கள் வீட்டுக் கழிவுகளை அதிகளவில் கொட்டுவதால் பாடசாலையில் கற்கும் மாணவர்கள் உடல்நலப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர் என பாடசாலைச் சமூகத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

'குப்பையைக் கொட்டாதீர்கள்' என பதாகை இடப்பட்டுள்ளது. அதனையும் பொருட்படுத்தாது வீட்டுக் கழிவுகளை பாடசாலை அருகிலுள்ள வெற்றுக்காணி மற்றும் அதனோடிணைந்த வீதியில் பொதுமக்கள் கொட்டி வருகின்றனர். அதனால் துர்நாற்றம் வீசுவதால் மாணவர்களுக்கு உடல்நலக்கோளாறுகள் ஏற்பட்டுள்ளன என பாடசாலைச் சமூகத்தினர் கவலை வெளியிட்டனர். (ச-110)



## பிரெஞ்சுப் பாண் தயாரிப்பு இலங்கைத் தமிழர் வெற்றி

கொழும்பு, மே 13

பிரெஞ்சுப் பாரம்பரிய சுவையான பாண் தயாரிப்புப் போட்டியில் இந்த ஆண்டுக்கான வெற்றியாளராக இலங்கைத் தமிழர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

உலகின் மிகப் பிரபல உணவுகளில் ஒன்றான பிரெஞ்சுப் பாண் உள்ளது.

பிரான்ஸில் ஆண்டுதோறும் பிரெஞ்சுப் பாண் தயாரிக்கும் போட்டி நடத்தப்படுகிறது.

வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்ட பரிஸில் வசிக்கும் தர்ஷன் செல்வராஜா என்பவரும் இந்தப் போட்டியில் பங்கேற்றார்.

பங்கேற்ற 126 போட்டியாளர்களில் சுவையான பாணைத் தயாரித்து வெற்றியாளராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு 4 ஆயிரம் யூரோவை தனதாக்கியுள்ளார். (ச-இ)

## ஜனகவுக்கு எதிரான பிரேரணை விவாதத்துக்கு எடுக்கத் தீர்மானம்

கொழும்பு, மே 13

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து ஜனக ரத்நாயக்கவை நீக்குவது தொடர்பான பிரேரணையை நாடாளுமன்ற விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 24ஆம் திகதி இந்த விவாதத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான தெரிவுக் குழுக் கூட்டத்தின்போது கட்சித் தலைவர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர். (ஒ-இ)

## உண்மையைச் சொல்லவேண்டும்; இல்லையேல் அவரே குற்றவாளி!

### கோத்தாவை போட்டுத்தாக்கும் சந்திம வீரக்கொடி

கொழும்பு, மே 13

இலங்கைக் கடலில் விபத்துக்குள்ளான நியூ டைமன்ட் கப்பலை விடுவிக்க உத்தரவிட்டது யார் என்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவிக்கவேண்டும் என்றும், இல்லையேல் அவர் மீது சந்தேகிக்க நேரிடும் என்றும் எதிர்க்கட்சியில் சுயாதீனமாக இயங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவைச் சேர்ந்த சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கைக் கடலில் விபத்துக்கு உள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கான இழப்பீடு தொடர்பான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் எமது கடல்சார் சுற்றாடலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு தற்போது மதிப்பிடப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை போதுமானது அல்ல. இதனால் பாதிப்புக்களுக்கு ஏற்றவாறு முறையாக மதிப்பீடுகளைச் செய்து இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதேவேளை, இதற்கு முன்னர் விபத்துக்கு உள்ளான நியூ டைமன்ட் கப்பல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பேசப்படுகின்றது. அந்தக் கப்பலை விடுவிப்பதற்காக அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஊடாக முன்னைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நடவடிக்கை எடுத்ததாக அவர் மீது நீதி அமைச்சர் குற்றம்சாட்டியுள்ளார். இதனால் முன்னாள் ஜனாதிபதி இது தொடர்பில் பதிலளிக்க வேண்டும்.

இது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினையே. இந்த நம்பிக்கை தொடர்பான பிரச்சினை தொடர்பில் கோத்தாபய பதிலளிக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்தக் கப்பலை அவரின் உத்தரவின் பேரிலேயே விடுவித்து உள்ளதாக கருத வேண்டிவரும் - என்றார். (ஒ-இ)

# நெற்செய்கையை ஊக்குவிக்க உரக்கொள்வனவுக்கு கூப்பன்!

## ரூ.10,000 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, மே 13

நாட்டில் நெற்செய்கையை ஊக்குவிக்கும் வகையில் விரைவில் விவசாயிகளுக்கு உரக் கொள்வனவுக்கான கூப்பன் முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்கென 10ஆயிரம் மில்லியன் ரூபா நிதியொதுக்கப்பட்டுள்ளது. விரைவில் அவை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகசந்திப்பில் அமைச்சர் மஹிந்த அமரவீர இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

நாட்டுக்கு அரிசி இறக்குமதி செய்யப்படும் நிலைமையைத் தவிர்ப்பதற்காக நெற்செய்கையை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

40 ஆயிரம் ரூபாவாகக் காணப்பட்ட யூரியா உரத்தின் விலையை 10 ஆயிரம் ரூபாவாகக் குறைத்துள்ளோம்.

எதிர்வரும் தினங்களில் உரக் கப்பல்கள் வருகை தந்ததன் பின்னர் இந்த விலைகள் மேலும் சரியும்.

விரைவில் விவசாயிகளுக்கு உரக் கொள்வனவுக்கான கூப்பன் முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதன்மூலம் விவசாயிகளுக்கு 40,000 ரூபா வரை உரக்கொள்வனவுக்கான நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதற்காக 10 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது கூப்பன் அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெகுவிரைவில் அவை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

வெளிநாடுகளிலிருந்து அரசி இறக்குமதி செய்யும் நிலைமையை தவிர்த்து, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதே இதன் நோக்கம்.

இனிவரும் காலங்களில் பாஸ்மதி தவிர்ந்த வேறு எந்தவொரு அரிசியையும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்படாது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் குரூரத்தனத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது

## சஜித் கொந்தளிப்பு

**கொழும்பு, மே 13**

**குரூரத்தனமும், குண்டர்த்தனமும் நிறைந்த மக்கள் ஆணை இல்லாத இந்த அரசில் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை ஒருபோதும் அங்கீகரிக்கமுடியாது. அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்கள் மீது அட்டூழியங்கள் நடந்தால் தராதரம் பாராது கடும் தண்டனை வழங்கப்படும் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் கொந்தளித்துள்ளார்.**

தாக்குதலுக்குள்ளான அமைதி வழியில் போராட்டத்தில் ஈடுபட்ட அரகலய போராட்டக்காரரான சமூகச் செயற்பாட்டாளர் யத்நிகேஷலவின் உடல்நிலை குறித்துக் கேட்டறிந்த பின்னர் ஊடகங்களிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நிகேஷல மீது கடுவலை முன்னாள் பிரதி மேயர் சந்திக அபேரத்னவால் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

மேலும் தாக்கப்படவுள்ள போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்ப்பட்டியல் சமூக வலைத்தளங்களில் பகிரப்படுகின்றன.

குரூரத்தனமும், குண்டர்த்தனமும் மலிந்து மக்கள் ஆணை இல்லாத இந்த அரசில் காட்டுமிராண்டித்தனம் தலைதூக்கியுள்ளது.

கொடூரமான குண்டர்த்தன அரசியலைச் செயற்படுத்தும் அனைவருக்கும் தராதரம் பாராது அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் - கடுமையான தண்டனை வழங்கப்படும்.

தற்போதைய அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் கோழைத்தன செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது- என்றார். (ச-22)

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வவுனியாவில் வழங்கல்

வவுனியா, மே 13

வவுனியா மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் வவுனியா இலுப்பையடியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் கஞ்சியைப் பரிமாறி தமிழ் மக்கள் இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட அவலங்களை, அடுத்த தலைமுறையினருக்கு கடத்தும் நோக்குடன் தமிழர் தாயகப்பகுதிகளில் பலதரப்புக்களாலும் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

அந்தவகையில் நேற்று முற்பகல் 11 மணியள



வில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்டது. (ஒ-110)

# இ.போ.ச. காப்பாளர் மீது பொய்யான முறைப்பாடு

## வவு.சாலை பேருந்துகள் பணிப்புறக்கணிப்பு

வவுனியா, மே 13

இ.போ.ச. சாலை காப்பாளர் தாக்கியதாக பொய்யான முறைப்பாடு செய்து பேருந்து சேவைக்கு குழப்பகரம் விளைவிப்போருக்கு பொலிஸார் உடந்தையாகச் செயற்படுகின்மையைக் கண்டித்து இலங்கை போக்குவரத்துச் சபை யின் வவுனியா சாலை ஊழியர்கள் நேற்று வெள்ளிக்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பில் வவுனியா சாலை இ.போ.ச. ஊழியர்கள் தெரிவிக்கையில்,

கடந்த சில நாள்களாக ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்களை ஏற்றியிறக்கும் தனியார் பேருந்து எமது சேவைக்கு முரணான வகையில் வழித்தடம் இல்லாது பயணிகளை ஏற்றிச் செல்கின்றது. அதனால் முரண்



பாடு ஏற்பட்டது. அதனடிப்படையில் சாலை காப்பாளர் தனியார் பேருந்து ஊழியர்களை தாக்கினாரென எமக்கெதிராக பொய்யான முறைப்பாட்டை பூவரசன்குளம் பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்துள்ளனர்.

பொலிஸ்நிலையம் சென்றபோது, பொலிஸார் முன்னிலையிலேயே தனியார் பேருந்து தரப்பினர் [illegible]தல் விடுத்தனர். பொலிஸாரும் அவர்களுக்கு உடந்தையாகவே செயற்பட்டனர். இந்த விடயத்தில் பூவரசன்குளம் பொலிஸார் பக்கச்சார்பாக நடந்து கொள்கின்றமை கண்டிக்கத்தக்கது.

எமக்கு நீதியான தீர்வை வழங்கி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறில்லையெனில் மாகாணம் தழுவிய [illegible] முன்னெடுக்கவும் நாம் தயார் - என்றனர். (ச-110)




என்னதான் உதவாத பொருள் எண்டாலும் அதை எப்பிடியோ வித்து கெத்துக்காட்டுறவையை 'செல்லும் செல்லாச் செட்டியார் எண்டு சொல்லுவினம். அப்பிடியான செல்லும் செல்லாச் செட்டியார்கள்தான் யாழ்ப்பாணத்தில சாப்பாட்டுக்கடையள் வைச்சிருக்கினம்போல. எப்பிடியும் தாங்கள் போடுற சாப்பாட்டை சனத்திட்ட செலுத்திப் போடுவினம்.

ஒரு சைவக்கடைக்காரர் தோசை மிஞ்சிப் போனால் கவலைப்படமாட்டார். அடுத்தநாள் வடைக்கு ஆட்டுற உளுந்தோட மிஞ்சின தோசையையும், மிஞ்சின சோத்தையும் சேர்த்து ஆட்டுக்கல்லுக்க போட்டு வடையாக்கிபோடுவார். அந்த வடை மிஞ்சினால் அதை அடுத்தநாள் வடைகுழம்பாக்குவார். வடக்குழம்பும் மிஞ்சினால் அடுத்தநாள் சாம்பாரோட கலந்திடுவார். இப்பிடிச் சுத்திச் சுழண்டு எப்பிடியோ ஒண்டையும் மிஞ்சவிடாமல் காசாக்கிப் போடுவார்.

சைவக்கடைக்காரரே இப்பிடி வித்தை காட்டேக்கே, மச்சக்கடைக்காரர் மட்டும் சும்மாயிருப்பினமோ? ஆனால் அவை சைவக்கடைக்காரர் மாதிரி ஒரு சாப்பாட்டை இன்னொரு சாப்பாடாக்கி விக்கமுடியாது. அதால அவை என்ன செய்வினமெண்டால் மிஞ்சின சாப்பாட்டையெல்லாம், பிரிட்ஜ்ஜுக்குள்ள போட்டிட்டு பிறகு தேவைப்படேக்க எடுத்துச் சூடாக்கி, ஆக்களுக்கு 'நைஸா' குடுத்துப்போடுவினம். ஒண்டிரண்டு கடையள் மட்டும்தான் அண்டைக்கே அளவாச் சமைச்சு, அதை அண்டைக்கே விக்கிறவை. பெரும்பாலான கடையள் பிரிட்ஜ்ஜுக்க வைச்சு பிரிச்சுமேயுற விளையாட்டைத்தான் காட்டுறவை. அப்பிடி வைக்கேக்க எந்தநேரமும் பிரிட்ஜ் வேலை செய்யாது. அதுவும் இப்ப கரண்ட்காசு ஏறியிருக்கிறதால, சாப்பாடு ஐஸ் ஆகினவுடன் பிரிட்ஜை நிப்பாட்டிப் போடுவினமாம். அதால சாப்பாடுகள் பழுதாகிறதுகூட. அதைச் சூடாக்கி குடுக்கேக்க, என்ன செய்யிறதெண்டு சனமும் சாப்பிட்டு வந்திடும். இப்பிடித்தான் ஒரு கடைக்காரர் பழுதான இறைச்சியில கொத்துரொட்டி போட்டுக் குடுத்திருக்கிறார். அதை வாங்கினது ஒரு அதிகாரியின்ர மனைவி. அவா கொத்துரொட்டியில போட்ட இறைச்சி பழுதெண்டு சொல்ல, அந்த அதிகாரி சொல்லவேண்டிய ஆக்களுக்கு சொல்லுற விதமாச் சொல்ல உடனடி 'அக்சன்' எடுத்து கடைக்குச் சீலும் வைச்சாச்சு. இதே கொத்துரொட்டியை ஒரு சாதாரண ஆள் கொண்டு போய் நியாயம் கேட்டிருந்தா இப்பிடி ஒரு நடவடிக்கையும் எடுபட்டிராது. அப்பிடியிராமல் எல்லாருக்கும் ஒரேமாதிரி நடவடிக்கைகளை அதிகாரியள் எடுத்தினம் எண்டா நல்லம் பாருங்கோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதிக் கொடை

யாழ்ப்பாணம், மே 13
கோப்பாய் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், கேள்வர் நாம் அமைப்பு என்பன இணைந்து வீதி விபத்தில் உயி ரிழந்த மகிந்தனின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி குருதிக்கொடை முகாம் இன்று காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை சரவணபவானந்தா பாடசாலைக்கு அருகில் இயங்கி வரும் கோப்பாய் மாதர்சங்கக் கட்டடத் தில் நடைபெறவுள் ளது. (ஒ-66)

## ருவிற்றர் சி.இ.ஓ. பெண் நியமனம்

வொஷிங்டன், மே 13
ருவிற்றர் நிறுவனத்துக்குப் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியை நியமித்துள் ளேன் என எலான் மஸ்க் அறிவித்துள் ளார்.

அவரின் பெயரை வெளியிடாத மஸ்க், அவர் ஒரு பெண் என வெளிப்படுத்தியுள் ளார்.

புதிய பிரதம நிறைவேற்று அதிகாரி 6 வாரங்களுக்குள் தனது பணியை ஆரம் பிப்பார்.

நிறைவேற்றுத் தலைவராகவும் பிரதம தொழில்நுட்ப அதிகாரியாகவும் தான் பதவி வகிக்கவுள்ளதாக மஸ்க் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்க ஊடக நிறுவன மான என்.பி.சி யூனிவர்சலில் பணிபுரி யும் லிண்டா யாக்காரினோ என்பவரே இந் தப் பதவியை ஏற்கவுள்ளார் எனத் தகவல் கள் கசிந்துள்ளன. (ச-இ)

## 1.34 கோடி குழந்தைகள் குறைப்பிரசவத்தில் பிறப்பு

வொஷிங்டன், மே 13
கடந்த 2020 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 1.34 கோடி குழந்தைகள் குறைப்பிரசவத்தில் பிறந்துள்ளன. போர், பருவநிலை மாற்றம் மற்றும் விலைவாசி உயர்வு ஆகியவை இதற்குக் காரணமாக அமைந்துள்ளது என ஐ.நா.சபை தெரி வித்துள்ளது.

இதுதொடர்பில் வெளியிடப்பட்ட ஆய்வ றிக்கையில் கூறியிருப்பதாவது: கடந்த 2020ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 9.9% குழந்தைகள் குறைப் பிரசவத்தில் பிறந்துள்ளன. இது 2010 ஆம் ஆண்டில் 9.8 வீதமாக இருந்தது. 2020 இல் குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 1.34 கோடி யாக அதிகரித்துள்ளன. இதில் சுமார் 10 லட்சம் குழந்தைகள் இறந்துவிட்டன. காற்றுமாசு காரணமாக ஆண்டுக்கு 60 லட்சம் குழந்தைகள் குறைப்பிரசவத்தில் பிறப்பது தெரியவந்துள்ளது - என்றுள் ளது. (ச-இ)

## நவீன தொழில்நுட்பத்தில் மிரட்ட வரும் 'ஆளவந்தான்'

22 ஆண்டுகளுக்கு முன்பு வெளி யாகிய 'ஆளவந்தான்' திரைப்படத்தை நவீன தொழில்நுட்பத்தில் மீண்டும் வெளியிடுவதற்கு படக்குழு முடிவு செய் துள்ளது.

ஆசியாவிலேயே, முதன்முறையாக மோஷன் கிராஃபிக்ஸ் கமராவைப் பயன்படுத்தி வெளிவந்த திரைப்படம் 'ஆளவந்தான்'. ஒலி, ஒளி, திரைக்கதை என்று ஒவ்வொரு காட்சிகளிலும் வித்தி யாசம் காட்டியிருப்பார் கமல்.

இரண்டு கமல்கள் சண்டைபோடுவதை கிராபிக்ஸ் தொழில்நுட்பத்தில், அன் றைய காலத்திலேயே எடுத்து மிரட்டியி ருப்பார்கள்.

இந்தநிலையில் இப்போது இன்னும் நவீன தரத்தில் புதிய தொழில்நுட்பத்தில் வெளியாகவிருக்கின்றது. இதற்கான ஆரம்பகட்டப் பணிகளை படக்குழு ஆரம்பித்துள்ளது எனத் தயாரிப்பாளர் தாணு தெரிவித்தார்.





## கிளி.மருத்துவமனையில் தாதியர் தின நிகழ்வுகள்

கிளிநொச்சி, மே 13
கிளிநொச்சியில் சர்வதேச தாதி யர் தின நிகழ்வு நேற்று கொண் டாடப்பட்டது. கிளிநொச்சி மாவட் டபொது மருத்துவமனை மண்ட பத்தில் இந்த நிகழ்வு மு.ப. 10 மணிக்கு இடம்பெற்றது. இதன் போதுதாதிய சேவையில் ஈடுபட்டு மறைந்த தாதியர்கள் நினைவு கூரப்பட்டனர். தொடர்ந்து தாதி யர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

நிகழ்வில் மருத்துவர்கள், தாதி யர்கள், மருத்துவமனை அலு வலர்கள் எனப் பலர் பங்கேற்ற னர். (ச-113)

## யாழ். வேம்படி பாடசாலையின் குறைபாடுகள் களையப்படும்!

யாழ்ப்பாணம், மே 13
யாழ்.வேம்படி மகளிர் பாடசாலை மாணவர்களின் தேவைப்பாடுகள் தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறியப்படுத்தி அதற்குரிய தீர்வைப் பெற்றுத்தருவதற்கு விரைவுபடுத்துவேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் இயங்கிவந்த சிற்றுண்டிச்சாலையை மீள செயற் படுத்துவது, மாணவர்களுக்கான வடிகட்டிய குடிதண்ணீரை வழங் குவது தொடர்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சிற்றுண்டிச்சாலை அனுமதி தொடர்பில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமாக கடிதம் ஒன்றை அனுப்பி வைத் ததாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

அதனை விரைந்து செயற்படுத்துமாறு வலயக் கல்விப் பணிப்பா ளருக்குத் தகவல் வழங்கியுள்ளேன்.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்காக ஏற்கனவே பயன்பாட் டிலிருந்த வடிகட்டிய குடிதண்ணீர்த் தொகுதி பழுதடைந்துள்ள நிலையில் புதிய தொகுதியை அன்பளிப்புச் செய்ய யாராவது முன்வந்தால் அதனை பொருத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற் கொள்வேன் என அவர் குறிப்பிட்டார். (ச)

## இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்**: புதிய முயற்சிகள் அனைத் தும் அனுகூலமாகும். என்றா லும் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் சில சங்க டங்கள் ஏற்படும்.

**இடபம்**: பல வகைகளிலும் அனுகூல மான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். சிலருக்கு எதிர் பாராத பணவரவு கிடைக்கும். நிம்மதி பெறுவீர்கள். ஆதாயம் கிடைக்கும்.

**மிதுனம்** : புதிய முயற்சிகள் சாதக மாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். சகோதர வகையில் எதிர்பாராத சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கடகம்**: சிந்தித்துச் செயற் படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்**: உறவினர்களால் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பண வரவு கிடைக்கும்.

**கன்னி**: வாழ்க்கைத் துணை உங் கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்தபண உதவி கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு

**துலாம்**: சொல்லிலும் செயலிலும் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவு களால் கடன் வாங்கவும் நேரிடும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்** : தொடங்கும் காரி யங்கள் அனைத்தும் வெற்றிகர மாக முடியும். குடும்பத்தினர் உங் கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள்.

**தனுசு**: சுறுசுறுப்பாகவும் பரபரப்பா கவும் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்து வம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்**: அனுகூலமாம் நிறைந்த நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூ டும். வாக்குவாதம் வேண்டாம்.

**கும்பம்**: மனதில் தன்னம்பிக்கையும் துணிச்சலும் அதிகரிக்கும். முக்கிய முடிவு எடுக்க உகந்த நாள். அந்நி யோன்யம் அதிகரிக்கும். மகிழ்ச்சியும் உற்சாகமும் கிடைக்கும்.

**மீனம்**: புதிய முயற்சிகளைப் தொடங்கு வது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## குருதி சிந்தாத இனவழிப்பு

'இலங்கையின் தொல்லியல் திணைக்களத்தின் சின்னத்தில் மாத்திரம் பௌத்தத்துக்கு இடமளிக்கவில்லை. அந்தத் திணைக்களத்தின் செயற்பாடுகள் அனைத்துமே பௌத்தத்துக்கானதுதான்' என்பது திணைக்களத்தின் பணிப்பாளராலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வரலாறுகள் எவ்வாறு திரிபுபடுத்தப்படுகின்றன என்பதற்கும் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் தொல்லியல் திணைக்களம் ஊடாக எவ்வாறு சிதைக்கப்பட்டு ஓர் இனவழிப்புச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது என்பதற்கும் அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளரே ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கியிருக்கின்றார். இந்தவிடயம் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, தொல்லியல் திணைக்களம் ஊடாக வடக்கு – கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளும் மீளாய்வு செய்யப்படவேண்டும்.

காணி முகாமைத்துவம் தொடர்பிலான நிறுவனங்களின் சட்ட ஏற்பாடுகளில் திருத்தம் மேற்கொள்வது மற்றும் புதிய சரத்துக்களைத் திருத்துவது, உள்ளீடு செய்வது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் கடந்த புதன்கிழமை கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் பங்கேற்ற தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அனுரமனதுங்க, 'கடந்த 30 ஆண்டுகளாக வடக்கு – கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற போர் காரணமாக அங்கு தொல்லியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. வடக்கு – கிழக்குக்கு தற்போது முன்னுரிமை வழங்கி திணைக்களம் செயற்படுகின்றது. இதனால்தான் அந்தப் பிரதேசங்களில் தொல்லியல் திணைக்களத்தின் பணிகள் அதிகளவில் நடைபெறுவதான தோற்றப்பாடு காணப்படுகின்றது. அதேவேளை, வடக்கு – கிழக்கில் முன்னெடுக்கப்படும் தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு அரச நிதி போதுமானதாக இல்லை. சர்வதேச நிறுவனங்கள், நன்கொடையாளர்கள் மற்றும் பிக்குகளிடமிருந்து கிடைக்கப்பெறும் நிதியிலேயே வடக்கு – கிழக்கில் தொல்பொருள் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம்' என்று கூறியிருக்கின்றார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'தனிநபர்களின் நிதியைப் பயன்படுத்தி தொல்லியல் செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியாது. யாரேனும் தனிநபரோ நிறுவனமோ பணத்தை வழங்கி வடக்கில் அதனைச் செய்யுங்கள், இதனைச் செய்யுங்கள் என்றால் அதனை நீங்கள் செய்ய முடியாது. நீங்கள் தனியார் நிறுவனம் அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள்' என்று குறிப்பிட்டதுடன் 'தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் விகாரையோ வீடோ அமைக்கமுடியாது. அது அரசுக்குச் சொந்தமான பிரதேசம். அவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் அவர்கள் தமது விருப்பப்படி நிர்மாணம் செய்யும்போது பொலிஸார் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும் தெரிவித்துள்ளார். தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் ஜனாதிபதியின் கருத்துக்களிலிருந்து வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட தொல்லியல் செயற்பாடுகள் பிக்குகள் பணம் வழங்கியே நடத்தப்பட்டமை அம்பலமாகின்றது. இது நன்கு திட்டமிட்ட வகையில் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தின் தொன்மையை – வரலாற்றைச் சிதைத்தழிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதில் மாற்றுக்கருத்திருக்கமுடியாது.


வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தமிழர்க்ளின் தொன்மையைப் பறைசாற்றும் இடங்களைத் தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமித்து பிக்குகளின் பணத்தில் அவற்றை சிங்கள – பௌத்த இடங்களாக மடைமாற்ற முயற்சித்திருந்தது நெடுந்தீவு வெடியரசன் கோட்டை, குருந்தூர் மலை என்று பல சர்ச்சைக்குரிய இடங்கள் இவ்வாறு உள்ளன. பிக்குகளின் பணத்துக்காக அவர்களின் தேவைகளை நிறைவேற்ற மேற்கொள்ளப்பட்ட இந்தச் செயற்பாடுகளை மீளப் பெற்றுக் கொள்வார்களா? அந்தப் பகுதிகளில் தமிழர்களின் உண்மையான வரலாற்றைச் சொல்வார்களா? இதே தொல்லியல் திணைக்களத்தினர் தமிழர் ஒருவர் பணம் வழங்கினால் தமிழர்களின் தொன்மையை வடக்கு – கிழக்கில் ஆய்வு செய்வார்களா?

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்றுமுன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர், வடக்கு – கிழக்கில் 20 இடங்கள் தவறாக அடையாளப்படுத்தப்பட்டு பல ஏக்கர்கள் சுவீகரிக்கப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார். அப்படியாயின் அவை மீளளிக்கப்படுமா? அங்கு அமைக்கப்பட்ட விகாரைகள் இடித்தழிக்கப்படுமா? போரின் பின்னர் குருதி சிந்தாத இனவழிப்பை தொல்லியல் திணைக்களம் முன்னெடுக்கின்றது என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று தேவை?

### நாளொரு நல்வார்த்தை

"இந்த உலகை மாற்றுவதற்கு உங்களால் பயன்படுத்தக்கூடிய மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம் கல்வி"

— நெல்சன் மண்டேலா



# தேர்தல் நோக்கத்துடன்தான் பேச்சு என்றால் எதிர்ப்போம்

## தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் -ஜனாதிபதி சந்திப்புத் தொடர்பில் சுதந்திரக் கட்சி தெரிவிப்பு

**கொழும்பு, மே 13**

**வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவேண்டும் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாக இருந்தால் அதில் எவ்வித சிக்கலும் இல்லை. நாம் அதிகாரப்பகிர்வை எதிர்ப்பவர்கள் அல்லர். ஆனால், தேர்தலை இலக்காகக் கொண்டே வடக்கு, கிழக்கு மக்கள் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி பேச்சுக்களை முன்னெடுத்துள்ளார் என்றால் அது நியாயமற்றது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.**



சுதந்திரக்கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் விஜேலால் டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்றஉறுப்பினர் என்ற வகையிலேயே அங்கஜன் இராமநாதனுக்கு ஜனாதிபதி செயலகத்தால் அழைப்பு விடுக்கப்பட்டது. கட்சி ரீதியாக அழைப்பு விடுக்கப்படாமை தவறாகும். இவ்வாறானதொரு அழைப்புக் கிடைக்கப்பெற்றவுடனேயே அவர் கட்சித் தலைமைத்துவத்துக்கு இது தொடர்பில் அறிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு சிங்கள வேட்பாளருக்கும் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தால் இலகுவாக வெற்றி பெற முடியும் என்ற எண்ணம் காணப்படலாம். இவ்வாறு ஜனாதிபதியின் இலக்கு தேர்தல் வெற்றி என்றால் அது நியாயமற்றதாகும், என்றார். (ஒ-இ)

# பயங்கரவாதச் சட்டம் அமெரிக்காவில் பரப்புரை

## மன்னிப்புச்சபை ஆரம்பித்தது

கொழும்பு, மே 13

பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்கும் அதேவேளை, தற்போது முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை மீளப் பெறுமாறு அல்லது சர்வதேச நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச மற்றும் அமெரிக்காவுக்கான இலங்கைத்தூதுவர் மஹிந்த சமரசிங்க ஆகியோரிடம் வலியுறுத்துமாறு கோரி அமெரிக்காவில் இயங்கும் சர்வதேச மன்னிப்புச்சபை பொதுமக்களுக்கான பரப்புரையை ஆரம்பித்துள்ளது. (ஒ-இ)

**நாளை** 14.05.2023 ஞாயிற்றுக்கிழமை சித்திரை 31

சுபநேரம் : 08.53 - 10.23
ராகுகாலம் : 04.23 - 05.53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறைக்கு ஏற்றவகையில் காணிச் சட்டங்களைத் திருத்துக

## ஜனாதிபதி பணிப்புரை

**கொழும்பு, மே 13**

**நடைமுறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு காணி கட்டளைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொண்டு புதிய தேசிய காணிக் கொள்கை ஒன்றை உருவாக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.**

காணி முகாமைத்துவம் தொடர்பிலான நிறுவனங்களின் சட்ட ஏற்பாடுகளில் திருத்தம் மேற்கொள்வது மற்றும் புதிய சரத்துக்களை திருத்துவது உள்ளீடு செய்வது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட காணிச் சட்டங்களே இன்றும் நடைமுறையில் உள்ளது என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, காணிப் பயன்பாடுகள் தொடர்பில் கொண்டுவரப்பட்டுள்ள சட்டத் திருத்தங்கள் நடைமுறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பொருத்தமற்றதாகக் காணப்படுகிறது என்றும் தெரித்தார்.

அதற்கென நடைமுறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு காணிக் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு பணித்தார்.

அரசாங்கத்தின் தேவைகளுக்காக கையகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படாமல் இருக்கின்ற காணிகளை உரிமையாளர்களுக்கு மீளக் கையளிக்கும் பணிகளை ஆரம்பியுங்கள்.

காணிகளை கையகப்படுத்தும் போது சந்தைப் பெறுமதியை செலுத்தி கையகப்படுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு கிராமசேவகர் பிரிவுகள் மட்டத்தில் காணப்படுகின்ற காணி உரிமையாளர்களின் விவரம் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள காணிகள் மற்றும் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்ற காணிகள் தொடர்பில் கண்டறிந்து பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் அறிக்கையொன்றை தயாரிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்தப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு தகுதியான குழுவொன்றை நியமியுங்கள் என்றும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுரை வழங்கினார். (ச-இ)

# மக்கள் சேவை உதாசீனம்; சிக்கலில் 200 அதிகாரிகள்

கொழும்பு, மே 13

மக்களுக்கான சேவைகளை ஒழுங்கான முறையில் ஆற்றத்தவறிய 200 அதிகாரிகள் மீது மக்களால் நாடு முழுவதும் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகளில் பணிபுரியும் 200 அதிகாரிகளுக்கு எதிராக இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

மக்களுக்கான சேவைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றிக் கொடுப்பதில்லை, உதாசீனம், தரக்குறைவாக நடந்துகொள்ளல் போன்ற குற்றச்சாட்டுகள் இந்த அதிகாரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்தப்படுகிறது.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை பாயும் என்று இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர மேலும் குறிப்பிட்டார். (ச-22)

## தேர்தலில் களமிறங்கிய

# கூட்டுறவுப் பணியாளரை சேவைக்கு உள்ளீர்க்க

## வடக்கு கூட்டுறவுத் திணைக்களம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 13

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்து சம்பளமற்ற விடுமுறை பெற்றிருக்கும் கூட்டுறவுப் பணியாளர்கள் சேவைக்கு சமூகமளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும் என வடக்கு மாகாணசபை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தேவநந்தினி பாபு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அரசியல் உரிமைகளைக்கொண்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், இயக்குநர் சபை உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் நீதிமன்ற ஆணையின் பிரகாரம் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

புதிய திகதி வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் வெளியிடப்படும் வரையில், வேட்பாளர்கள் என்ற வகையில் விலகியுள்ள கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தமது சேவைக்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கவேண்டும்.

அந்தக் காலப்பகுதியில் அவர்கள், தங்களது ஊழியத்தைப் பயன்படுத்தி அரசியல் கட்சிகளின் அலுவலகங்களில் அல்லது கூட்டுறவு நிறுவனங்களின் சுற்றுச்சூழலில் அல்லது அரசியல் பரப்புரை செயற்பாடுகளில் ஈடுபடமாட்டார்கள் என சத்தியக்கடதாசி பெற்று உள்ளீர்க்கவேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)



# டெங்கு ஒழிப்பு தொடர்பில் கிளிநொச்சியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, மே 13

டெங்கு ஒழிப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்டச்செயலக மாநாட்டு மண்டபத்தில், மாவட்டச்செயலர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில், மாவட்டத்தில் டெங்கு பரவலை கட்டுப்படுத்தல் மற்றும் நுளம்பு பெருகும் இடங்களை பிரதேச செயலர் பிரிவுகள் எனும் அடிப்படையில் துப்புரவு செய்தல் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

மேலும், எதிர்வரும் 15 ஆம் திகதி கரைச்சி பிரிவில் உள்ள அனைத்து அமைப்புக்கள், திணைக்களங்கள், தொழிற்சாலைகள் அனைத்தையும் ஒன்றாக்கி சிரமதானம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மாவட்டச்செயலர் தெரிவித்துள்ளார். (ஒ-14,113)

# அரகலய செயற்பாட்டாளர் பியத் மீது தாக்குதல்

## சிகிச்சை பெற்றபோது பொலிஸாரால் கைது

கொழும்பு, மே 13

தாக்குதலுக்குள்ளான நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த சமூகச் செயற்பாட்டாளர் பியத் நிகேஷல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடுவளை மாநகரசபையின் முன்னாள் பிரதி மேயர் சந்திக்க அபேரத்ன முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சமூகச் செயற்பாட்டாளர் பியத் நிகேஷல கடந்த புதன்கிழமை பிற்பகல் வீடு திரும்பிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் பத்தரமுல்ல, கொஸ்வத்தை சமகி மாவத்தை பகுதியில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரு வாகனங்களில் வந்த கடுவளை முன்னாள் பிரதி மேயர் சந்திக்க அபேரத்ன தம் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார் என்று பியத் நிகேஷல தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

ஆனால், தாம் மாலபேயிலிருந்து கொஸ்வத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தபோது பியத் நிகேஷல தம்மைத் தாக்குதல் நடத்த முயற்சித்தார் என்று கடுவளை மாநகரசபையின் முன்னாள் பிரதி மேயர் சந்திக்க அபேரத்ன குற்றஞ் சாட்டியுள்ளார்.

காயங்களுக்குள்ளான சமூகச் செயற்பாட்டாளர் பியத் நிகேஷல தலங்கம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர், கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கடுவளை மாநகரசபையின் முன்னாள் பிரதி மேயர் சந்திக்க அபேரத்ன சந்தேகத்தின் பேரில் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டார். முல்லேரியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டார். (எ-இ)

# உழவியந்திரத்தின் பாகங்கள் திருட்டு

கிளிநொச்சி, மே 13

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடு நகர்ப் பகுதியிலுள்ள வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவியந்திரத்தின் இரு சக்கரங்கள் மற்றும் பெறுமதிமிக்க உதிரிப் பாகங்கள் என்பன நேற்று முன்தினம் வியாழக்கிழமை திருடப்பட்டுள்ளன.

திருட்டுத் தொடர்பாக இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய இராமநாதபுரம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14,113)

# சி.டி.விக்ரமரத்னவுக்கு மேலும் பதவி நீடிப்பு

கொழும்பு, மே 13

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவின் பதவிக் காலம் மேலும் நீடிக்கப்படவுள்ளது என உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மார்ச் 26 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஜூன் 26 ஆம் திகதி வரை மூன்று மாத பதவி நீடிப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஜூன் 26 ஆம் திகதியிலிருந்து அடுத்த வருடம் வரை அவரது பதவிக் காலம் மேலும் நீடிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரிட்டனில்

# இலங்கைத் தமிழருக்கு ஆயுள் தண்டனை!

கொழும்பு, மே 13

இலங்கைத் தமிழர் உட்பட இருவருக்கு ஆயுள் தண்டனை வழங்கி லண்டனில் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஆப்கான் அகதியொருவரை மேற்கு லண்டன் பகுதியில் 15 முறை கொடூரமாகத் தாக்கி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி மேற்கு லண்டனில் சவுத்ஹாலில் உள்ள சாலையில் இந்தக் கொலை சம்பவம் இடம்பெற்றது.

ஆப்கானிஸ்தான் அகதியான 16 வயது ரிஷ்மீத் சிங் என்பவர் பூங்காவில் நண்பர்களுடன் இருந்த போது தவறான தகவலால் குறித்த இளைஞர்களால் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த வழக்கில் இலங்கைத் தமிழரான 18 வயது வனுஷன் பாலகிருஷ்ணன் மற்றும் இல்யாஸ் சுலைமான் ஆகிய இருவருக்கும் ஆயுள் தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வனுஷன் பாலகிருஷ்ணனுக்கு 24 ஆண்டும், சுலைமானுக்கு 21 ஆண்டும் சிறைத் தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

தலிபான்களின் அச்சுறுத்தல் காரணமாக ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறிய ரிஷ்மீத்தும் அவரது தாயாரும் பிரிட்டனில் தஞ்சம் கோரியதாகவும் நீதிமன்ற விசாரணையில் தெரியவந்துள்ளது.

ரிஷ்மீத் சிங் சட்டவிரோதக் குழுக்கள் தொடர்புடையவர் அல்லர் எனவும், தவறான நேரத்தில் தவறான இடத்தில் சிக்கிக்கொண்டதால், பரிதாபமாக கொல்லப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் தரப்பு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. (ஒ-இ)

# களுத்துறை சிறுமி மரணம் விடுதி உரிமையாளர் கைது

பாடசாலை மாணவியை விடுதியில் தங்குவதற்கு அனுமதித்த குற்றச்சாட்டில் விடுதி உரிமையாளரின் மனைவி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை தெற்கு பொலிஸார் நேற்று முன்தினம் அவரை கைதுசெய்துள்ளனர்.

களுத்துறையில் 5ஆவது மாடிக் கட்டடத்திலிருந்து விழுந்து மர்மமான முறையில் 16 வயதுச் சிறுமி அண்மையில் உயிரிழந்தமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை துரிதப்படுத்தியுள்ளனர்.

விடுதியில் குறித்த சிறுமி வேறொருவரின் அடையாள அட்டை பயன்படுத்தி அனுமதிபெற்றுள்ளார்.

உரியமுறையில் சரிபார்க்காமல் அடையாளத்தை உறுதிப்படுத்தாமல் சிறுமிக்கு இடத்தை வழங்கிய குற்றத்தில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## வீடு வாடகைக்குத் தேவை

மானிப்பாய், கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், கோண்டாவில், திருநெல்வேலி போன்ற இடங்களில் மாபிள் பதித்த பாதுகாப்பான பெரிய வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.

**076 691 4727**

## கேள்வி கோரல்

உடுவில் மகளிர் கல்லூரியின் சிற்றுண்டிச் சாலையை எடுத்து நடத்துவதற்கு ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்

காலம்: **26.05.2023** இற்கு முன்னர்

நேரம்: மு.ப. **8.00** - பி.ப. **2.00** வரை

அதிபர்

# INVITATION FOR BID (2023/07)

## Regional Directorate of Health Service Jaffna

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a grant from **World Bank** towards the cost of **Primary Health Care System Strengthening Project (PSSP)-2023** and intends to apply part of the proceeds of this grant to payments under the contracts listed below in the table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

***"Bidding will be conducted through National Competitive Bidding (NCB. The Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.***

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:021 222 4966, Fax: 021 222 9971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table, upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment should be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | | | From 15.05.2023 until 26.05.2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 22.05.2023 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 29.05.2023 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
| NP/04/41/2023/PSSP/W/01 | Improvement Work at MOH Sandilipay,Jaffna. | 0.41 | 47Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 4,200.00 | Till 14.08.2023 |
| NP/04/41/2023/PSSP/W/03 | Construction of Internal Road at MOH Karainagar,Jaffna. | 0.15 | 18Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 1,500.00 | Till 14.08.2023 |
| NP/04/41/2023/PSSP/W/19 | Construction of Boundary wall and Gate at Base Hospital Point Pedro. | 1.56 | 75Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 16,000.00 | Till 14.08.2023 |
| NP/04/41/2023/PSSP/W/22 | Improvement Work at Base Hospital Point Pedro,Jaffna.-Mortuary | 0.56 | 58Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 6,000.00 | Till 14.08.2023 |
| NP/04/41/2023/PSSP/W/44 | Roof Renovation and Ceiling Works of Operation Theatre at Base Hospital Tellippalai,Jaffna. | 0.15 | 17 Days | C9or C8 (Buildings) | 1,500.00 | 1,500.00 | Till 14.08.2023 |
| NP/04/41/2023/PSSP/W/46 | Improvement Work At Base Hospital Chavakachcheri,Jaffna-Opd & Ward No.01 | 1.47 | 75Day | C9or C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 14.08.2023 |
| NP/04/41/2023/PSSP/W/47 | Improvement Work At Base Hospital Chavakachcheri,Jaffna-Opd & Ward No.07 | 1.41 | 74Day | C9or C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 14.08.2023 |
| NP/04/41/2023/PSSP/W/48 | Improvement Work At Base Hospital Chavakachcheri,Jaffna-Ward No.09 | 1.80 | 77Day | C9or C8 (Buildings) | 1,500.00 | 19,000.00 | Till 14.08.2023 |
| NP/04/41/2023/PSSP/W/49 | Improvement Of Internal Access To A & E At Base Hospital Poit Pedro,Jaffna | 1.99 | 79Days | C9, C8 and C7 (Buildings) | 1500.00 | 21,000.00 | Till 14.08.2023 |
| NP/04/41/2023/PSSP/W/50 | Improvement Work At AMC Health Village Pannai, Jaffna-Fish Tank Roof | 0.70 | 62 Days | C9or C8 (Buildings) | 1,500.00 | 7,000.00 | Till 14.08.2023 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service,**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காட்சி



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கணித வர்த்தக மன்ற ஏற்பாட்டில் கணித கற்றல் உபகரணங்கள் காட்சிப்படுத்தல் கலாசாலை மண்டபத்தில் கடந்த 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆரம்பக்கல்வி தொடக்கம் க.பொ.த. சாதாரண தரம் வரை கணிதம் கற்கும் மாணவர்களுக்கு பயன்படக்கூடிய கற்றல் உபகரணங்களை ஆசிரிய மாணவர்கள் உருவாக்கி காட்சிப்படுத்தினர்.
(ய-9)



மனிதம் 88 அமைப்பு நடத்திய சமூக விழிப்புணர்வு மற்றும் கல்வி ஊக்குவிப்பும் மேற்படி அமைப்பின் பிரான்ஸ் கிளையின் பிரதிநிதி த.பரமேஸ்வரன் தலைமையில் கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டபத்தில் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக திட்டமிடல் பிரிவு மாணவர்களின் போதை தொடர்பான விழிப்புணர்வு நாடகம் நடைபெற்றது. அத்துடன் மாணவர்களுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன.
(ய-159)


## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் காணிக்கிளையில்
கடமையாற்றும் காணிப்பயன்பாட்டு
அபிவிருத்தி உத்தியோகத்தர்

**திருமதி**
**றீபன் நியாளினி**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!



தோற்றம் 28.09.1986
மறைவு 11.05.2023

பிரிவால் துயருறும்
பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
**பிரதேச செயலகம், வலிகாமம் தெற்கு, உடுவில்.**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 . 07 . 1947



மறைவு 04 . 05 . 2021

**கந்தையா அன்னலிங்கம்**

ஆண்டுகள் இரண்டு ஆயிடினும்
அன்பு முகம் மறக்கவில்லை என்றும்
உம் நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டாமணி விளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்
இன்று வேண்டித் துதித்தே இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புலவனார் வீதி,
கல்வியங்காடு.
(cs.50371) (N - 1)
குடும்பத்தினர்
076 593 9353
(cs.50370) (N-1)

## தொழிலாளர்கள் தேவை

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தொழிலாளர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் 20 - 50 வயதுக்குட்பட்ட ஆண்களிடமிருந்து கோரப்படுகின்றன.
சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்கள் 19.05.2023 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்கவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**அதிபர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.** (CR/39823)AH-1

## தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள
தனியார் நிறுவனத்துக்கு
துப்புரவுப் பராமரிப்பாளர்
தேவை. ( 20 - 35
வயதுக்குட்பட்ட ஆண்கள்)
**கீழ்க்காணும் முகவரிக்கு
சுயவிபரக்கோவையுடன்
விண்ணப்பிக்கவும்.**

(CS/50389)AH-1

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
**வ.வ. இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்
இல.58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்:- 021 222 4766**

## St. John's College, Jaffna Old Boys' Association

ST. JOHN'S COLLEGE JAFFNA CEYLON

**OBA DAY AND THE ANNUAL GENERAL MEETING**

OBA Day and the 105th Annual General Meeting of the Old Boys' Association of St. John's College, Jaffna will be held on Saturday 27th May 2023 at St. John's College.

**PROGRAMME FOR THE DAY**

07:30 am - Holy Communion Service
08:30 am - Breakfast
10:00 am - Annual General Meeting

**AGENDA**

1) Prayer
2) Condolences
3) President's Address
4) Minutes of Last AGM
5) Annual Report
6) Principal's Review
7) Statement of Accounts
8) Amendment of Constitution (if any)
9) Election of Executive Committee

11:30 am - Cricket Match (Old Boys vs Present Boys)
12:30 pm - Fellowship Lunch
02:00 pm - Cricket Match (continues)
04:00 pm - Principal's Tea
04:30 pm - Soccer Match (Old Boys vs Present Boys)

**Those who wish to submit resolutions please handover to secretary on or before 22nd May 2023**

**Kindly accept this as an official invitation and no individual invitations will be sent.**

Tickets for breakfast and lunch could be obtained from the treasurer.


**Sgd. V. S. B Thuseetharan**
**Principal.**

**Sgd. R.Hajeeban**
**Hony. Secretary**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வதேச விசாரணை அரசு இரட்டைவேடம்



## சாணக்கியன் விளாசல்

**கொழும்பு, மே 13**

**இறுதிப்போரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பில் சர்வதேச விசாரணை கோரப்படும்போது அதற்கு மறுக்கும் இலங்கை அரசாங்கம், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பான விடயங்களை விவாதிப்பதற்கு சர்வதேச நீதிமன்றை நாடியுள்ளது. இந்த விடயத்தை இலங்கை அரசாங்கத்தின் இரட்டைவேடம் புலப்படுத்துகிறது -இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நாடாளுமன்றில் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
காணாமற்போனோரின் உறவுகளுக்கும், போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இதுவரை நீதி கிடைக்கவில்லை.
போரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் நியாயமான நீதி கிடைக்க வேண்டுமாயின் சர்வதேச நீதி விசாரணை அவசியம் என்பதை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். உள்ளக விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு சென்றால் அது நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்தன்மையை கேள்விக்குள்ளாக்கும் என அரசாங்கம் கூறி வருகிறது.
எனினும் இலங்கையின் கடற்பரப்பில் பெரும் சேதத்தை விளைவித்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விடயம் தொடர்பாக வழக்கை நடத்துவதற்கு சிங்கப்பூர் நீதிமன்றை நாடியுள்ளது அரசாங்கம். எமது பிரச்சினையை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வது முறையற்றது என்றால் எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தை எவ்வாறு கொண்டு செல்லமுடியும்? நீதித்துறையின் மீது நம்பிக்கை இருந்தால் இங்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கலாமல்லவா? அரசாங்கத்தின் இந்த இரட்டை நிலைப்பாட்டை சர்வதேசம் கவனத்திற் கொள்ளவேண்டும் - என்றார். (ச-இ)

# ரயில் பாதையை வழிமறித்து வவு.வில் மக்கள் ஆர்ப்பாட்டம்

## புனரமைப்புப் பணி ஸ்தம்பிதம்

வவுனியா, மே 13
வவுனியாவில் புகையிரதப் பாதையை மறித்து கிராமமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் புகையிரதப் பாதை அமைக்கும் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.
வவுனியா மதகுவைத்தகுளம் பகுதியிலிருந்து ஏ - 9 வீதிக்கு விரைவில் செல்வதற்கு மூன்றுமுறிப்பு பகுதியில் அமைந்துள்ள புகையிரதக் கடவையை பாதுகாப்பற்ற முறையில் கடந்த 20 வருடங்களாக சுமார் 350 குடும்பங்கள் பயன்படுத்தி வந்தன.
இந்தநிலையில் வடக்குக்கான புகையிரதப் பாதையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையில், குறித்த பகுதியில் மண்மேடு உயர்த்தப்பட்டு தண்டவாளங்கள் போடப்பட்டு சீரமைக்கப்படுகின்றன.
புகையிரதக் கடவை ஊடாக கிராமமக்கள் செல்வதற்கு தடையேற்படுத்தும் முகமாக புகையிரதப் பாதையை அமைக்கும் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அந்த இடத்துக்கு வருகை தந்த நிரந்தரப் பாதை புனரமைப்பு பொறுப்பதிகாரி டபிள்யூ. குணசிங்க ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரச்சினையைக் கேட்டறிந்தார். ரயில் கடவையை பாதுகாப்பற்ற முறையில் கடந்து செல்வது ஆபத்தானது. பாதுகாப்பான ரயில் கடவைக்குரிய பாதையைப் பயன்படுத்துகின்றமையே உயிராபத்துக்களைத் தடுக்கும் என அறிவுரை வழங்கினார். (ச-110)

# சுருக்குவலை மீன்பிடி படகுடன் ஐவர் கைது!

வடமராட்சி கட்டைக்காடு கடற்பரப்பில் சுருக்கு வலையைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட ஐவர் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சட்டவிரோத தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட சுருக்கு வலை மற்றும் இரண்டு படகுகளும் கையகப்படுத்தப்பட்டன. சட்ட நடவடிக்கைகளுக்காக கைதுசெய்யப்பட்டவர்களை சான்றுப்பொருள்களுடன் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர். (ச)

# டெங்கு நோய்த் தாக்கம் கல்லீரல் பாதிப்பு அபாயம்

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மே 13
டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கல்லீரல் பாதிப்படைவதைத் தடுப்பதற்கு பெற்றோர் பொறுப்புடன் செயற்படவேண்டும் என சுகாதாரத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
இதுதொடர்பில் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவிக்கையில்,
டெங்குக் காய்ச்சலிலிருந்து மீண்ட சிறுவர்களை கடுமையான வேலையில் ஈடுபடுத்தினால் கல்லீரலில் பாதிப்பு அதிகமாக ஏற்படும்.
டெங்குக் நோய் குணமானதும் ஓரிரு வாரங்களுக்கு சிறுவர், சிறுமிகளுக்கு அதிக உடல் உழைப்பைக் கொடுக்காதீர்கள். கல்லீரல் பாதிக்கப்பட்டால், மூளை பாதிப்புறும்.
அதிக அளவில் பரசிற்றமோல் கொடுத்தால், அது குழந்தையின் கல்லீரலை சேதப்படுத்தும்
இதுவிடயத்தில் பெற்றோர் அவதானத்துடன் செயற்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)




# ஆசியாவின் ஒற்றுமைக்கு இடையூறு விளைவிக்கோம்

## ஜனாதிபதி ரணில் உறுதி

கொழும்பு, மே 13
ஆசியாவின் ஒற்றுமைக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் இலங்கை ஆதரவளிக்காது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
ஆசியாவின் முதலாவது மாநாட்டு மண்டபமான பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு 50ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.
ஆசிய பூகோள அரசியலுக்கும் பசுபிக் பிராந்திய அரசியலுக்கும் இடையில் பல வேறுபாடுகள் காணப்படுவதாகவும், அந்த வேறுபாடுகளை நாம் உணர்ந்து சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் பேணுவதற்கு செயற்படவேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.
அடுத்த இரண்டு தசாப்தங்களில் வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இலங்கையை முன்னேற்றுவதற்கு அணிசேராக் கொள்கை, பஞ்சசீலம் மற்றும் ஆசியக் கொள்கைகளைப் பயன்படுத்த வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.
உலக வல்லரசுகளாக மாறவேண்டும் என்ற இலட்சியத்துடன் சில குழுக்கள் பசுபிக் சமுத்திர நாடுகளுக்கிடையேயான ஒற்றுமையைக் குலைத்து அவற்றுக்கிடையில் மோதல் நிலைமையை ஏற்படுத்தியுள்ளன. அந்த நிலைமை இந்து சமுத்திரத்துக்குள் ஏற்படுவதைத் தடுக்க நாம் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். ஆசியாவின் ஒற்றுமையை சீர்குலைப்பதற்கு இலங்கை எந்த வகையிலும் துணைபோகாது என்பதையும் வலியுறுத்துகிறேன் - என்றார். (ஒ-இ)

## கடத்தல் - போதை - சித்திரவதை

# குழந்தைகளை வைத்துப் பிச்சை; பெண்ணுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, மே 13
குழந்தைகளைக் கடத்தி - ஹெரோய்ன் போதைக்கு அடிமையாக்கி - அவர்களை சித்திரவதை செய்து பிச்சையெடுக்கப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண்ணை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
குறித்த பெண், குழந்தையுடன் ஒபேசேகரபுர பிரதேசத்தில் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தார்.
அவரை விசாரித்தபோது அவரது குழந்தை இல்லையென்பது கண்டறியப்பட்ட நிலையில் சந்தேகத்தில் அவர் கைதுசெய்யப்பட்டார்.
அவரிடம் மேற்கொண்ட விசாரணையில்,
அநாதை இல்லங்களிலிருந்து சுமார் 20 சிறுவர்களை சந்தேகநபர், தனது சொந்தக் குழந்தையைப் பயன்படுத்தி கடத்திச்சென்று பேலியகொட பிரதேசத்தில் வீதிகளில் பிச்சையெடுக்க வைத்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.
பதினொரு வயதுடைய அந்தக் குழந்தைக்கு வெள்ளைப் பொருளை குடிக்க வற்புறுத்தியதாகவும் மருத்துவப் பரிசோதனையில் ஹெரோய்ன் போதைப்பொருள் என கண்டறியப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.
குழந்தையின் உதடுகளிலும் இடது காலின் பெருவிரலிலும் தீக்காயம் ஏற்பட்டுள்ளது எனவும் குழந்தையின் ஆசனவாயிலில் நாணயத்தின் அளவு எரிந்த தடயங்கள் காணப்படுகின்றன எனவும் பொலிஸார் நீதிமன்றில் அறிவித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்புரை விவகாரம்

# எமக்கு நடந்தது அநீதி இழப்பீடு கொடுங்கள்!

கொழும்பு, மே 13

மருத்துவத்துறையின் அசண்டையீனத்தால் எங்கள் வாழ்க்கைக்கு கூடுதல் சுமை ஏற்பட்டுள்ளது. எங்களைப் போன்ற ஏழைகளுக்கு இது உண்மையில் துரதிர்ஷ்டம். சிகிச்சை பெற நம்பிச்சென்ற எமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. தவறு அரசாங்கத்தின் மீதுதான். எமக்கு இழப்பீடு வேண்டும். இவ்வாறு அரச மருத்துவமனைகளில் கண்புரை அறுவை சிகிச்சைக்கு கிருமித் தொற்றுள்ள மருந்து பயன்படுத்தியதால் கண்பார்வையில் பாதிப்பை எதிர்கொண்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மருத்துவர்களின் அசண்டையீனமான செயற்பாட்டால் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொண்டவர்களின் கண்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன் உயிருக்கும் அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டுள்ளது என அவர்கள் குறிப்பிட்டனர்.

இதுதொடர்பில் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் தெரிவிக்கையில்,

நுவரெலியா பொது மருத்துவமனையில் குறித்த மருந்து பயன்படுத்தப்பட்டு கண்புரை சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டேன்.

சுமார் 14 நாள்களின் பின் சிக்கல்கள் தோன்றின. கண்ணின் மேல் சிலந்தி வலை இருப்பது போல் இருக்கிறது. படிப்படியாக பார்வையை இழக்க ஆரம்பித்தேன். அதனால் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன்.

எங்களைப் போன்ற ஏழைகளுக்கு இது நடந்தது உண்மையில் துரதிர்ஷ்டம். இது இப்போது எங்கள் வாழ்க்கைக்கு கூடுதல் சுமை. தவறு அரசாங்கத்தின் மீதே. எமது இந்த நிலைமை தொடர்பில் அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை. எங்களுக்கு நடந்ததற்கு இழப்பீடு வேண்டும் - என்றார். (ச-இ)


## சாரதி தேவை

தனியார் நிறுவனத்தின் உயர் அதிகாரிக்கு அனுபவம் உள்ள சாரதி (Driver) தேவை.



- வெளிமாவட்டத்திலிருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்.
- சம்பளம் நேரில் பேசித்தீர் மானிக்கப்படும்.

தொடர்பு : 077 120 9998

## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு கொத்துறொட்டி போடுதல், பிறைட்ரைஸ் தயாரித்தல், றொட்டி வேலை செய்தல் போன்ற மூன்று வேலைகளிலும் அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை.

தொடர்புகளுக்கு:077 6491 027

(CR 39294) 1-6


## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 09 . 1938



மறைவு 12 . 05 . 2023

### வள்ளிநாயகி தர்மலிங்கம்

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி)

யாழ். நாவற்குழியை பிறப்பிடமாகவும் சரசாலை, கனடா, கொக்குவில் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வள்ளிநாயகி தர்மலிங்கம் அவர்கள் நேற்று (12.05.2023) வெள்ளிக்கிழமை கொக்குவிலில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை லட்சுமியம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற தில்லைநாதர் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தர்மலிங்கம் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், அனுசேந்தியா (UK), அருனேந்தியா (UK), விமலேந்தியா (Australia), Dr.கௌரிபாலன் (UK), துஷியந்தியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திரகுமார் (UK), இமானுவல் (UK), பிரகதீசன் (Aaustralia), Dr.மீரா (UK), நடேஸ்வரலிங்கம் (ஈசன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், கதிர்காமநாதன் மற்றும் சிவயோகநாதன் (Australia), தில்லைநாயகி (Canada), கணேசநாதன், இரஞ்சிதநாயகி (Australia), காந்திநாயகி (Australia), டேவிட்திருலோகநாதன் (Canada) ஆகியோரின் மூத்த சகோதரியும், கோபிகா, சர்மிகா, பிரியங்கா, வேணன், டிலன், பிரஷிக்கா, பிரிட்டிக்கா, துளசி, அஸ்வினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

39/3, பிரம்படி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொடர்புகளுக்கு: 076 7494 761
076 7494 762

தகவல்:
குடும்பத்தினர்

(CS 24847) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 05 . 1937



மறைவு 12 . 05 . 2023

### அமரசிங்கம் இராசதுரை

(கலாபூசணம், சாகித்யரத்னா வாழ்நாள் விருது - 2017)

தையிட்டி காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூசணம், சாகித்யரத்னா (வாழ்நாள் விருது - 2017) திரு. அமரசிங்கம் இராசதுரை (எழுத்தாளர்- தையிட்டி அ.இராசதுரை) நேற்று (12.05.2023) வெள்ளிக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமரசிங்கம் ஆசைப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிதம்பரேஸ்வரியின் அன்புக் கணவரும், இந்திரா, காலஞ்சென்ற நவநீதராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கமலாம்பிகை, காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.05.2023) வெள்ளிக்கிழமை நடைபெற்று வழுக்கையாறு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்:
திருமதி இந்[illegible]
ச[illegible]
077 359 7310

தையிட்டி கிழக்கு,
காங்கேசன்துறை.

(CS 24[illegible])

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 06 . 1955



மறைவு 10 . 05 . 2023

### சுந்தரம் இராசலிங்கம் (தயா)

M.S.லேன் கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் இராசலிங்கம் (தயா) அவர்கள் கடந்த (10.05.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான சுந்தரம் ராசமணி தம்பதியரின் அன்பு மகனும், அருணாவின் பாசமிகு கணவரும், அமரர் சுப்பிரமணியம் செல்லமணி தம்பதியரின் மருமகனும், தபேசன், நிறோஜன், கம்சாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நதீஸ், சர்மி ஆகியோரின் அன்பு மாமனாரும், நித்விக், ஆர்த்விக் ஆகியோரின் அன்பு பேரனும், அமரர் மல்லிகாதேவி, குணசிங்கம், கலாதேவி, வசந்தாதேவி, விக்னேஸ்வரி, ராஜேஸ்வரி, அமரர் குலசிங்கம் (கண்ணன்), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரதிமலர், அமிர்தலிங்கம், இந்திரமூர்த்தி, தவம், கணேசலிங்கம், சுகிர்தா, யுவராஜ், தேவராஜா, பாஸ்கரன், பிரபாகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கொட்டகாடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible], கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 626 2954

(CS 24849) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருத்திரபுரீஸ்வரர்...

வடக்கு - கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தால் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு அதன் பணிப்பாளருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் உத்தரவிட்டிருந்ததாக அந்தச் சந்திப்பில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார். அவ்வாறான உறுதிமொழி வழங்கப்பட்டு 24 மணிநேரத்துக்குள்ளேயே அது மீறப்பட்டுள்ளது.

கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயம் அரச காணியில் அமைந்துள்ளது. அந்தக் காணியை குத்தகைக்கு கோரி ஆலய நிர்வாகம் கரைச்சிப் பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பித்திருந்தது. ஆலயம் அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவை தொல்பொருள் திணைக்களம் தமது ஆளுகைக்குட்பட்ட பிரதேசம் என்று வர்த்தமானி வெளியிட்டிருந்தது. எனவே தொல்பொருள் திணைக்களத்துக்குரிய பிரதேசத்தை மாத்திரம் எல்லையிட்டு அடையாளப்படுத்தி எஞ்சிய பகுதிகளை விடுவிக்குமாறு கரைச்சி பிரதேச செயலகத்தால் தொல்பொருள் திணைக்களத்திடம் கோரப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக எதிர்வரும் 18ஆம் திகதி அந்தப் பகுதியைப் பார்வையிட்டு எல்லையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- மே 18ஆம் திகதி தமிழ் மக்கள் இனப்படுகொலையை - முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கடைப்பிடிக்கும் நாளாகும். அன்றைய நாளில் மக்கள் நினைவேந்தலில் மூழ்கியிருக்க, எல்லைப்படுத்தலை எதிர்ப்பின்றி முன்னெடுக்கலாம் என்ற அடிப்படையிலேயே அன்றைய நாளைத் தெரிவு செய்துள்ளதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ-ஒ,5)

## பாவனைக்குதவாத...

அந்த உணவகத்தில் கடந்த புதன்கிழமை ஒருவர் கொத்துரொட்டியை வாங்கியுள்ளார். அதில் பழுதடைந்த நிலையில் இறைச்சி இருப்பது அவதானிக்கப்பட்டு, இதுதொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பு.ஆறுமுகதாசனிடம் முறையிடப்பட்டது.

இதனையடுத்து மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் பாலமுரளி தலைமையில் யாழ். மாநகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அந்தக் கடையில் திடீர்ப் பரிசோதனையை மேற்கொண்டனர். இதன்போதே பாவனைக்குதவாத வகையில் இருந்த சுமார் 45 கிலோ இறைச்சி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அத்துடன் கடையில் மேலும் சில குறைபாடுகள் அவதானிக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய கடை 'சீல்' வைக்கப்பட்டது. மீட்கப்பட்ட பாவனைக்குதவாத இறைச்சியை அழிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம-20,26)

## 2,090 கிலோ...

இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் இந்தக் கடத்தலுடன் தொடர்புடைய வலைப்பின்னலைக் கண்டறியும் நடவடிக்கைகளையும் தமிழகப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

தமிழகம் மற்றும் கேரளா மாநிலங்களில் இருந்து பெருமளவான கஞ்சாப் பொதிகள் இலங்கைக்குக் கடத்தப்படுகின்றன. இந்தக் கடத்தலைத் தடுக்கும் வகையில் சிறப்பு நடவடிக்கைகள் தமிழகத்தில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் புலனாய்வுத் துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு கஞ்சா கடத்தல் தொடர்பில் தீவிர கவனம் செலுத்தப்படுகின்றது. இந்த நிலையிலேயே, மேற்படி 2 ஆயிரத்து 90 கிலோ கஞ்சாப் பொதிகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. ஆறு பேர் சந்தேக நபர்களாகக் கைதுசெய்யப்பட்ட நிலையில், அவர்களிடம் நடத்திய மேலதிக விசாரணையில், இந்தக் கஞ்சாப் பொதிகள் கடல் வழியாக இலங்கைக்குக் கடத்தப்படவிருந்தமை தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-56)

## இனப்படுகொலை...

உயிரிழந்த மக்களை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்று ஆரம்பமானது. இந்நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதலாம் நாள் நினைவஞ்சலி யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் நேற்று இடம்பெற்றது.

ஒருநிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமாகிய நினைவேந்தலின்போது, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டு, ஈகச்சுடர் ஏற்றப்பட்டது. இதன்போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளும் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். இறுதியில் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (அ-ம)

## கொடூரத்...

இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

நீண்ட நாள்கள் முரண்பாடு காரணமாக கடந்த 10 நாள்களுக்கு முன்னர் 54 வயதுடைய குடும்பத்தலைவர் மீது கும்பல் ஒன்றால் தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பவத்தில் படுகாயடைந்த அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. தாக்குதல் நடத்திய கும்பலைச் சேர்ந்தோர் தலைமறைவாகியிருந்தனர். இந்த நிலையில் காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் 8 பேரை நேற்று இரவு கைது செய்தனர். அவர்களிடமிருந்து தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாள்கள், கூரிய ஆயுதங்கள் மற்றும் பொல்லுகள் கைப்பற்றப்பட்டன. இந்தக் கும்பலுக்கு வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்பப்படுவதாகவும் கூலிக்கு பணம் பெற்று வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-26)

## 14 வயது...

ஆசிரியர் ஒருவரின் பெயரை குறிப்பிட்டு அந்த மாணவன் எழுதியதாக நம்பப்படும் கடிதமும் மீட்கப்பட்டுள்ளது.

அந்த மாணவன் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். மாணவனின் சடலம் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இறப்புத் தொடர்பில் மாணவனின் பெற்றோரிடமும், மீட்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியரிடமும் விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-18,110)

## கிழக்கில்...

பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டது. திருகோணமலை சிவன் கோயிலடிப் பகுதியிலும், மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றிலிலும் இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. பொதுமக்களின் பங்கேற்புடன், பொதுமக்களிடமிருந்தே அரிசி மற்றும் விறகு என்பன சேகரிக்கப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டுப் பகிரப்பட்டது. இதன் தொடர்ச்சியாக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இன்று முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் பகிரப்படவுள்ளது. (அ-ம-125)

## பால்மா...

குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு கிலோகிராம் பால்மாவின் விலை 200 ரூபாவால் குறைக்கப்படவுள்ளது.

நாளைமறுதினம் முதல் நடைமுறையாகும் வரையில் இந்த விலைக்குறைப்பு இடம்பெறவுள்ளதுஎன்று அமைச்சர்நளின் பண்டார தெரிவித்துள்ளார். (அ-ம)

## பௌத்த...

ஞாயிற்றுக்கிழமை நிறுவப்படவுள்ள நிலையில், இந்தப் பௌத்த மயமாக்கல் நடவடிக்கைக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்றையதினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'சர்வதேச நாணய நிதியத்திடம் எடுப்பது பிச்சை: வாங்குவது புத்தர் சிலையா?' 'தாய்லாந்து புத்தருக்கு திருகோணமலையில் என்னவேலை!' 'திருகோணமலை எங்கள் சொத்து! கிளிநொச்சி உருத்திர புரீஸ்வரம் எங்கள் சொத்து!', 'வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்', 'தொல்லியல் திணைக்களமே வெளியேறு' 'இனப்படுகொலை அரசே இன்னும் நீ அடங்கவில்லையா?' என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ-ம-125,22)

## நேற்றைய...

அரசாங்கத்தின் நலன்புரித் திட்டங்களை வழங்குவது தொடர்பான விவாதமும் வாக்கெடுப்பும் நேற்று நடைபெற்றது. இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வேண்டியிருந்ததாலேயே ஜனாதிபதிக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்புப் பிற்போடப்பட்டது. நாளைமறுதினம் திங்கட்கிழமை இந்தச் சந்திப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

# மரண அறிவித்தல்

பிறப்பு
18 . 05 . 1942



இறப்பு
08 . 05 . 2023

## திருமதி வேலாயுதம் பாலயோகினி
### (ராணி அக்கா)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதம் பாலயோகினி கடந்த (08.05.2023) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை - இராசசவுந்தரம் தம்பதிகளின் அன்பான புதல்வியும், காலஞ்சென்றவர்களான சோதிப்பிள்ளை - சின்னத்தம்பி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதம் அவர்களின் அன்பு மனைவியும், யோகேஸ்வரி, காலஞ்சென்ற மங்கையற்கரசி மற்றும் பரஞ்சோதிலிங்கம் (டென்மார்க்), பரமேஸ்வரி (ஜேர்மனி), விமலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமுள்ள சகோதரியும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா, பத்மநாதன் மற்றும் சற்குணானந்தரத்தினம் (டென்மார்க்), முல்லர் (ஜேர்மனி), காலஞ்சென்ற மகாதேவன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மைத்துனியும், ஸ்ரீசிவாயன், காலஞ்சென்ற ஜங்கரன், ஸ்ரீரஞ்சனா (கனடா), ஸ்ரீவதனி (வவுனியா), ஸ்ரீ சசிதேவி (சுன்னாகம்), ஸ்ரீசசிகரன் (கனடா), சத்தியபாமா (கொழும்பு), சத்தியகௌரி (கனடா), சத்தியசீலி (யாழ்ப்பாணம்), கைலாயநாதன் (கொழும்பு) ஆகியோரின் பாசமுள்ள அன்னையும், செல்வராணி (யாழ்ப்பாணம்), மகாலிங்கம் (கனடா), குமாரகுலசூரியர் (வவுனியா), கோசலை (கனடா), பரணிதரன் (கொழும்பு), சண்முகானந்தன் (கனடா), போல்கார்டின் (யாழ்ப்பாணம்), கேமா (கொழும்பு) ஆகியோரின் அன்பான மாமியும், திருச்செந்தூரன், திருமகள், கஜேந்திரன், துளசி, தர்ஷன், கஜீவ், கிரிதரன், விஜிதா, சசிதரன், கிரிஜா, சிந்துஜா, துவாரகன், பிரணவன், அகல்யா, துஷா, துஷான், ஜாவேஸ், தக்சினி, அக்சரா ஆகியோரின் பிரியமான பேர்த்தியும், அஷ்விகன், துளிர்ஹா, ஷகிஷா, தகிலா, திரிசா ஆகியோரின் பாசமான பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**கைலாயநாதன் - 077 307 5681, விஜிதா - 077 362 3667**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா ஒத்திவைப்பு

ஸ்ரீ காமாட்சி சன சமூக நிலையத்தால் நாளை ஞாயிற்றுக் கிழமை நடத்தப்பட விருந்த பரிசளிப்பு விழா தவிர்க்க முடி யாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள் ளது என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

பரிசளிப்பு விழா எதிர் வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணியளவில் நிலைய முன்றிலில் நடைபெறும் என்று சனசமூக நிலைய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (எ-இ)


## பணியாளர்கள் தேவை

**யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை**

- **கணக்காளர்:** A/L வர்த்தக துறையில் படித்த வடிவான கையெழுத்துடைய ஆண்/ பெண் இருபாலாரும்
- **கணினி தரவு பதிவாளர்** (Data Entry Operator): O/L, ICT, A/L,Git படித்தவர்கள் (ஆண் / பெண்)
- **விற்பனை உதவியாளர்:** (ஆண் / பெண்)
- **சிட்டை எழுதுனர் :** வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

(முன் அனுபவம் இல்லாதவர்களுக்கு வேலை கற்பிக்கப்படும்)

சுயவிபரக்கோவையுடன் முற்பகல் 10.00 மணிமுதல் நேரில் வரவும்

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**

**இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(cr. 39799) (N-1)

## காணி விற்பனைக்கு

**உரும்பிராய் மருதனார்மட வீதியில் இரண்டாவது ஒழுங்கையில் (சிவகுலவீதி) காணி விற்பனைக் உண்டு.**




**தொடர்பு:**

**077 366 8282**


## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 08 . 1943



மறைவு
10 . 05 . 2023

### தம்பாபிள்ளை மயிலுப்பிள்ளை

**(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஓய்வுபெற்ற மின்சார பரிசோதகர்)**

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மில்வீதி, மீசாலை கிழக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாபிள்ளை மயிலுப்பிள்ளை கடந்த (10.05.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சுதாகரன் (கனடா), தேவதர்சன் (லண்டன்), மகிந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயமோகனச்செல்வி, சூரியப்பிரியா, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், சின்னத்துரை, நல்லம்மா, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஈஸ்வரதாஸ், லோகேஸ்வரி, கமலேஸ்வரி, மனோகரன், இரஞ்சிதன், ஸ்ரீதரன், பாஸ்கரன், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இலக்கியா, ஸ்ரேயன், டேனுஜன், ஆதிரா, மித்திரா (டர்னிகா), சித்திரா (ராகவி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மில்வீதி, மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**

(CS/50395)AH-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 227 0149**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
19 . 04 . 1937



மறைவு
13 . 04 . 2023

கடந்த 13.04.2023 அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத்தலைவி

### திருமதி விக்னேஸ்வரன் சேதுலட்சுமி

(மாசுவன், நீர்வேலி)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (13.05.2023) சனிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் திருநெல்வேலியிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையி லும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மயூரா பார்மசி**
**திருநெல்வேலி.**

(cs.50388) (N - 1)

**குடும்பத்தினர்**
**53/18, ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 ... advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.